அனுப்புநர்,

திருமதி.கி.சாந்தி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
தருமபுரி.

பெறுநர்,

The Deputy General Manager,
GAIL (India) Limited,
Central Construction Office,
C/O Hotel Ashwa Park,
96/6-A,Steel Plant Main Road,
Reddipatty Roundana
Salem, Tamil Nadu 600 002.

ந.க.4904/2023/த2, நாள்: 29.08.2024.

அய்யா,

பொருள் : வனம் - கெயில் (இந்தியா) நிறுவனம் - தருமபுரி மாவட்டம் - கும்மனூர் மற்றும் தொப்பூர் ஒதுக்கப்பட்ட வன நிலத்தில் கேஸ் பைப்லைன் அமைக்க 5.58.31 ஹெக். நிலம் பயன்படுத்துவது - வனநிலத்திற்கு ஈடாக மாற்று நிலம் கோரியுள்ளது - தொடர்பாக.

பார்வை : 1.GAIL/KKMBPL/Collector,Dharmapuri/CA Land/2024, Dtd.16.05.2024.
2.தருமபுரி வருவாய் கோட்டாட்சியரின் ந.க.3180/2024/அ3, நாள்: 21.08.2024.
3.இவ்வலுவலக ந.க.4904/2023/த2 நாள்: 28.08.2024.

******

பார்வை 1-ல் காணும் கடிதத்தில், தருமபுரி மாவட்டத்திற்குட்பட்ட கும்மனூர் மற்றும் தொப்பூர் வனப்பகுதியில் கெயில் (இந்தியா) நிறுவனத்தின் மூலம் கேஸ் பைப்லைன் அமைக்க 5.58.31 ஹெக். நிலம் தேவைப்படுவதாகவும், அதற்கு ஈடாக மாற்று நிலம் 5.58.31 ஹெக். வழங்க கோரப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் பாளையம் உள்வட்டம் கம்மம்பட்டி கிராமம் புல எண்.692/1 மொத்த பரப்பு 22.12.56 ஹெக்டேர் கரடு தீ.ஏ.த. அரசு புறம்போக்கு நிலத்தில் 5.58.31 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு ஈட்டுநிலமாக வழங்க பார்வை 2-ல் காணுமாறு முன்மொழிவு வரப்பெற்றுள்ளது.

பார்வை 3-ல் காணும் கடிதத்தில் தருமபுரி மாவட்டத்திற்குட்பட்ட கும்மனூர் மற்றும் தொப்பூர் வனப்பகுதியில் கெயில் (இந்தியா) நிறுவனத்தின் மூலம் கேஸ் பைப்லைன் அமைக்க 5.58.31 ஹெக். நிலம் தேவைப்படுவதாகவும், அதற்கு ஈடாக கம்மம்பட்டி கிராமம் புல எண்.692/1 மொத்த பரப்பு 22.12.56 ஹெக்டேர் கரடு தீ.ஏ.த. அரசு புறம்போக்கு நிலத்தில் 5.58.31 ஹெக்டேர் நிலமாற்றம் செய்ய முன்மொழிவுகள் நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்நேர்வில், வனநிலத்திற்கு ஈடான அரசு புறம்போக்கு நிலத்திற்கு அரசாணை எண்.117, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்:18.3.2022ன்படி நிர்ணயிக்கப்படும் நிலமதிப்பு தொகையினை கெயில் இந்தியா நிறுவனம் செலுத்தும் பட்சத்தில் அரசு விதிகளுக்குட்பட்டு, கம்மம்பட்டி கிராமம் புல எண்.692/1 மொத்த பரப்பு 22.12.56 ஹெக்டேர் கரடு தீ.ஏ.த. அரசு புறம்போக்கு நிலத்தில் 5.58.31 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு ஈட்டுநிலமாக வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- கி.சாந்தி,
மாவட்ட ஆட்சியர்,
தருமபுரி.

//உண்மை நகல்//

மாவட்ட ஆட்சியருக்காக

நகல்
மாவட்ட வன அலுவலர்,
தருமபுரி.